செய்தி வெளியீடு எண்: 39 நாள் :14.01.2011

# தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 125 போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 7 கோடியே 80 இலட்ச ரூபாய் ஊக்கத் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழக அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு ஆகியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் ஆண்டுதோறும் செயல்திறன் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் திருநாள் ஜனவரி திங்கள் 15ஆம் நாள் கொண்டாடப்படுவதையொட்டி, தமிழக போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களில், 2010ஆம் ஆண்டில் 91 நாட்கள் முதல் 150 நாட்கள் வரை பணி புரிந்த தொழிலாளர்களுக்கு தலா 85 ரூபாய்;

151 நாட்கள் முதல் 200 நாட்கள் வரை பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு தலா 195 ரூபாய் ;

200 நாட்களுக்கு மேல் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 625 ரூபாய் வீதம் செயலாக்க ஊக்கத்தொகை வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாகப் போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 125 தொழிலாளர்களுக்கு மொத்தம் 7 கோடியே 80 இலட்சம் ஆயிரம் ரூபாய் செயல்திறன் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.

***

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.